**CC.No.435/2022 (JM.No.II, DHARMAPURI.)**

**03.07.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**(A1 ஆஜர், A2, A3 ஆஜர் இல்லை)**

**PW34:திரு.ராஜா த/பெ.சாமிநாதன்**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

**33) கையாடல் ரூ.36,000/–**

12.12.2012 அன்றில் **நகைகடன் எண்.5906** ன் படி திருமதி.ஞானபாரதி என்பவரின் பெயரில் பட்டை மாடல் செயின்–1( கொக்கி இல்லாதது), மோதிரம் –1 ஆகிய இரண்டு உருப்படிகளுக்கு அடமானம் பேரில் ரூ.36,**000/–** நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 289/6 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடன் எண்.5621 முதல் 6017 வரையுள்ள நகைகடன் பேரேடு பக்கம் 289/6 ல் பதிவுகள்** ஏற்கனவே அ.சா.ஆ.54 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நாள்வழிப்பேரேடு பக்கம் 13/3 ல் நகை கடன் ரூ.36,000/– வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு– 3 பக்கம் எண்.13 ல் ரூ.36,000/– அ.சா.ஆ.245** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/ காசாளர் எழுதி இவர் மற்றும் சங்க செயலர் ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் திருமதி.ஞானபாரதி என கையொப்பம் உள்ளது. கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.36,000/– வழங்க சங்க செயலர் திருமதி. ஜெயந்தி அனுமதித்து, காசாளர் திரு.முருகன் வழங்கியதாக இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். ஏற்கனவே அந்த பற்றுச் சீட்டு அ.சா.ஆ 56 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்திலும், கடன் விண்ணப்பத்திலும் ஞானபாரதி என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்படவில்லை. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பம் ஏற்கனவே அ.சா.ஆ.53 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் எவரும் கையொப்பமிடவில்லை. 09.10.2013 அன்று சங்க தலைவர், சரக மேற்பார்வையாளர், களமேலாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி ஞானபாரதி என்பவர் பெயரில் வைக்கப்பட்ட பட்டை மாடல் செயின்–1( கொக்கி இல்லாதது), அடமான நகை போலி

என்பதையும், மோதிரம் –1 உண்மையான தங்க நகை என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டது. திருமதி. ஞானபாரதி என்பவரை விசாரித்ததில் 22.11.2013 ம் தேதிய வாக்குமூலத்தில் பட்டைமாடல் செயின்–1(கொக்கி இல்லாதது), மோதிரம் –1 ஆகிய இரண்டு உருப்படிகள் அடமானம் வைத்து ரூ.36,000/– கடன் பெறவில்லை என்றும், நகைகடன் பேரேடு, பற்றுசீட்டு, நகை கடன் விண்ணப்பம் எதிலும் நான் கையொப்பம் இடவில்லை என்றும், இந்த கடனுக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். **அவர் அளித்த வாக்குமூலம் அ.சா.ஆ.246 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து கையிருப்பு குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**<u>34) கையாடல் ரூ.26,000/–</u>**

10.01.2013 அன்றில் **நகைகடன் எண்.5911** ன் படி திரு.ராஜாமணி என்பவரின் பெயரில் செயின்–1 அடமானம் பேரில் ரூ.26**,000/–** நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 294/6 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடன் எண்.5621 முதல் 6017 வரையுள்ள நகைகடன் பேரேடு பக்கம் 294/6 ல் பதிவுகள் அ.சா.ஆ.247 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேடு பக்கம் 42/3 ல் நகை கடன் ரூ.26,000**/–** வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு– 3 பக்கம் எண்.42 ல் ரூ.26,000/– அ.சா.ஆ.248** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/ காசாளர் எழுதி இவர் மற்றும் சங்க செயலர் ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் திரு.ராஜாமணி என கையொப்பம் உள்ளது. கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.26,000**/–** வழங்க சங்க செயலர் திருமதி. ஜெயந்தி அனுமதித்து, காசாளர் திரு.முருகன் வழங்கியதாக இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். அந்த **பற்றுச் சீட்டு அ.சா.ஆ 249** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்தில், ராஜாமணி என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் விண்ணப்பம் இல்லை. 09.10.2013 அன்று சங்க தலைவர், சரக மேற்பார்வையாளர் அரூர் மற்றும் சங்க எழுத்தர் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி ராஜாமணி என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகை போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டது. திரு. ராஜாமணி

என்பவரை விசாரிக்க அழைப்பாணை அனுப்பட்டதில் விலாசத்தாரர் வேப்பம்பட்டியில் இல்லை என்று தபால் திரும்ப பெறப்பட்டது. அந்த **திருப்பப்பட்ட தபால் அ.சா.ஆ.250 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து கையிருப்பு குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**35) கையாடல் ரூ.40,000/-**

11.01.2013 அன்றில் **நகைகடன் எண்.5912** ன் படி திரு.ராமன் என்பவரின் பெயரில் O கொக்கி கட்டிங் மாடல் செயின்-1 அடமானம் பேரில் ரூ.40,**000/-** நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 295/6 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடன் எண்.5621 முதல் 6017 வரையுள்ள நகைகடன் பேரேடு பக்கம் 295/6 ல் பதிவுகள் அ.சா.ஆ.251 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேடு பக்கம் 43/3 ல் நகை கடன் ரூ.40,000/- வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு- 3 பக்கம் எண்.43 ல் ரூ.40,000/- அ.சா.ஆ.252** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/ காசாளர் எழுதி இவர் மற்றும் சங்க செயலர் ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் திரு.ராமன் என கையொப்பம் உள்ளது. கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.40,000/- வழங்க சங்க செயலர் திருமதி. ஜெயந்தி அனுமதித்து, காசாளர் திரு.முருகன் வழங்கியதாக இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். அந்த **பற்றுச் சீட்டு அ.சா.ஆ 253** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்தில், ராமன் என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் விண்ணப்பம் இல்லை. 09.10.2013 அன்று சங்க தலைவர், சரக மேற்பார்வையாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி ராமன் என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகை போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டது. திரு. ராமன் என்பவரை விசாரிக்க அழைப்பாணை அனுப்பட்டதில் விலாசத்தாரர் BO வில் யாரும் இல்லை என்று தபால் திரும்ப பெறப்பட்டது. அந்த **திருப்பப்பட்ட தபால் அ.சா.ஆ.254 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து கையிருப்பு குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**36) கையாடல் ரூ.45,000/–**

31.01.2013 அன்றில் **நகைகடன் எண்.5936** ன் படி திருமதி.கவிதா என்பவரின் பெயரில் W கொக்கி கட்டிங் மாடல் செயின்–1 அடமானம் பேரில் ரூ.45,**000/–** நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 319/6 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடன் எண்.5621 முதல் 6017 வரையுள்ள நகைகடன் பேரேடு பக்கம் 319/6 ல் பதிவுகள்** ஏற்கனவே அ.சா.ஆ.46 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நாள்வழிப்பேரேடு பக்கம் 72/3 ல் நகை கடன் ரூ.45,000/– வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள நாள்வழிப்பேரேடு– 3 பக்கம் எண்.72 ல் ரூ.45,000/– அ.சா.ஆ.255** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/ காசாளர் எழுதி இவர் மற்றும் சங்க செயலர் ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் கவிதா என கையொப்பம் உள்ளது. கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.45,000/– வழங்கியதாக எழுத்தர்/ முதுநிலை எழுத்தர்/ காசாளர் அனுமதித்து கையொப்பமிட்டுள்ளார். அந்த ஏற்கனவே அந்த பற்றுச் சீட்டு அ.சா.ஆ 47 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்தில், கவிதா என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் விண்ணப்பம் இல்லை. 09.10.2013 அன்று சங்க தலைவர், சரக மேற்பார்வையாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி கவிதா என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகை போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டது. திருமதி.கவிதா என்பவரை விசாரிக்க அழைப்பாணை அனுப்பட்டதில் அழைப்பாணையை பெற்றுக்கொண்டு விசாரணைக்கு ஆஜராகவில்லை. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து கையிருப்பு குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

**37) கையாடல் ரூ.37,000/–**

30.03.2013 அன்றில் **நகைகடன் எண்.5999** ன் படி திருமதி.தனம் என்பவரின் பெயரில் O கொக்கி கட்டிங் மாடல் செயின்–1 அடமானம் பேரில் ரூ.37,**000/–** நகை கடன் வழங்கியதாக நகைகடன் பேரேடு பக்கம் 382/6 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **கடன் எண்.5621 முதல் 6017 வரையுள்ள நகைகடன் பேரேடு பக்கம் 382/6 ல் பதிவுகள் அ.சா.ஆ.256 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேடு பக்கம் 152/3 ல் நகை கடன் ரூ.37,000/– வழங்கியதாக கையிருப்பு குறைக்கப்பட்டுள்ளது. **02.04.2012 முதல் 30.11.2012 வரையுள்ள**

**நாள்வழிப்பேரேடு– 3 பக்கம் எண்.152 ல் ரூ.37,000/– அ.சா.ஆ.257** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாள்வழிப்பேரேட்டினை திரு.முருகன் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/ காசாளர் எழுதி கையொப்பமிட்டுள்ளார். நகைக்கடன் பதிவேட்டில் எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். கடன்தாரர் என்ற இடத்தில் தனம் என கையொப்பம் உள்ளது. கடன் பற்று சீட்டில் நகை கடன் ரூ.37,000/– வழங்கி சங்க செயலர் திருமதி. ஜெயந்தி அனுமதித்து, காசாளர் திரு.முருகன் வழங்கியதாக இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். அந்த **அந்த பற்றுச் சீட்டு அ.சா.ஆ 258** ஆக குறியீடு செய்யப்படுகிறது நகைக்கடன் பற்றுச் சீட்டில் கடன் வாங்குபவர் என்ற இடத்தில், தனம் என கையொப்பம் உள்ளது. நகைக்கடன் விண்ணப்பம் இல்லை. 09.10.2013 அன்று சங்க தலைவர், சரக மேற்பார்வையாளர் அரூர் மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது மேற்படி தனம் என்பவர் பெயரில் வைக்கப்பட்ட அடமான நகை போலி என்பதையும், பொய் ஆவணங்கள் தயாரித்து நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளதையும் அறிந்தேன். இந்த போலி நகைகள் என்னால் கைப்பற்றப்பட்டது. திருமதி.தனம் என்பவரை விசாரிக்க அழைப்பாணை அனுப்பபட்டதில் விலாசத்தாரர் வேப்பம்பட்டியில் இல்லை என்று தெரிவித்து தபால் திரும்ப பெறப்பட்டது. அந்த **திருப்பப்பட்ட தபால் அ.சா.ஆ.259** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதிலிருந்து மேற்கண்டவாறு போலி நகைகள் வைத்து கையிருப்பு குறைத்து கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது.

இனி இச்சங்கத்தில் பணியாற்றி திருமதி.ஜெயந்தி, செயலர் கு.இ(1), திரு.என்.முருகன், முதுநிலை எழுத்தர்/ காசாளர் கு.இ(2), திரு.சி.சாமி ஆச்சாரி, நகை மதிப்பீட்டாளர், கு.இ(3) என குறிப்பிடலாம். இந்த இணத்தில் போலி நகைகள் வைத்து பொய் கணக்கு எழுதுதல், போலி ஆவணங்கள் தயாரித்தல், நம்பிக்கை மோசடி செய்தல் மற்றும் கையாடல்கள் ஆகிய குற்றங்கள் அடங்கியுள்ளன. இவை இந்திய தண்டனை சட்டத்தின் தொடர்புள்ள பிரிவுகளின் படி தண்டணைக்குரிய குற்றங்களாகும்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.